## <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| O.S. No. 85/2019 | Date : 11.04.2023 | PW1 |
|---|---|---|
| Name: துரைசாமி | S/o. அம்மாசி (எ) அம்மாசி கவுண்டர் | |
| Evidence Recorded Time: 11.56 A.M. to 12.05 P.M | | |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-</u>

சென்ற வாய்தாவில் நான் குறுக்கு விசாரணை செய்யப்படும்போது பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள விசயங்கள் குறித்து தெரியாது என்று கூறியுள்ளேன், அதன் பிறகாவது அது என்ன என்று வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எதிர் வழக்குரையில் பிரதிவாதி நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் போர்ஜரியானது என்று கூறியுள்ளார் என்றால் அவ்வாறு தான் கூறியுள்ளார். நான் தான் சொத்தின் உரிமையாளர் என்று விளம்புகை பரிகாரம் கோர பிராதை சீர்திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1, வீட்டு வரி ரசீது, குடிநீர் ரசீது ஆகிய அனைத்தும் தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. அது வேறு ஒரு வீட்டிற்குரியது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 போர்ஜரியான ஆவணம் என்பதால் அதன் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 போர்ஜரியான ஆவணத்தை வைத்து பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/-PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.